**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 110/2019</u>**
**<u>நாள் 10/01/2024, புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வெங்கடேஷ் என்கிற வெங்கடேசன் | த/பெயர் - கேசவரெட்டி |
| வயது - 53 | தொழில் - விவசாயம் |
| விலாசம் - லிங்கபையன் பேட்டை கிராமம், பெரும்பேடு அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**<u>குறுக்கு விசாரணை-</u>**

நான் வழக்கு சொத்தை எத்தனை அட்டவனையாக காண்பித்துள்ளேன் என்றால் 2 பிரிவாக காண்பித்துள்ளேன். பி அட்டவனை சொத்தை ராமமூர்த்தி 7 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்துள்ளதாக கூறியுள்ளேன். நான்கு பக்க எல்லை விவரம் தெரியுமா என்றால் கிழக்கு எங்கள் நிலம் உள்ளது. மேற்கே மத்திராவேடு கிராமத்திற்கு செல்லும் ரோடு உள்ளது. அந்த சாலை இடையில் போட்டது. மேற்படி சாலை அரவாக்கம் செல்லும் பிரதான சாலையுடன் இணைந்துள்ளது. வடக்கே எங்கள் நிலம் உள்ளது. தெற்கு பக்கம் விஜயன் செங்கன் என்பவரின் இடம் உள்ளது. நான் வழக்கில் கூறியுள்ள நான்கு எல்லை விவரம் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கட்டியுள்ள வீட்டிற்கு அருகில் பழுதடைந்த சிமெண்ட் ஓடு போட்ட வீடு உள்ளது அது 15 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது. பிரதிவாதி நான் ஊரில் இல்லாத போது என் இடத்தில் வீடு கட்டியுள்ளார் என கூறியுள்ள நிலையில்

எவ்வளவு நாட்களாக நான் ஊரில் இல்லை என்றால் 3 மாதமாக இல்லை. அப்போது அவர் வீடு கட்டிவிட்டார். நான் மட்டும் தான் ஊரில் இல்லையா என்றால் ஆமாம். எனது மனைவி மற்றும் மகன்கள் இருந்தனர். வர்தா புயல் எப்போது வந்தது என்றால் 2015, 2016-ல் வந்தது. மேற்படி புயலில் புளியமரம் பிரதிவாதியின் வீட்டில் விழுந்து சேதமடைந்தது என்றால் சரியல்ல. புளியமரம் விழுந்து சேதம் ஏற்ப்பட்டதற்கு நான் நஷ்ட ஈடு தருவதாக பிரதிவாதியிடம் கூறினேன் என்றால் சரியல்ல. ராம மூர்த்தி வீட்டில் இருந்து 20 அடி தூரத்தில் விஜயன் வீடு உள்ளது. விஜயன் வீட்டில் இருந்து 20 தூரத்தில் செங்கன் வீடு உள்ளது. எங்கள் நிலத்திற்கும் கால்வாய்க்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நிலத்திற்கு அருகில் உள்ளது. பி அட்டவனை சொத்தில் பிரதிவாதி உள்ளார் என்றால் சரிதான். அ அட்டவனை சொத்தின் நான்கு எல்லை விவரம் தெரியுமா என்றால் கிழக்கே மிகுதி நிலம் உள்ளது மேற்கே மிகுதி வீடுகள் உள்ளது. வடக்கே ரோடு உள்ளது. தெற்கே ஆற்று கால்வாய் உள்ளது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**